
உளி - 8 | ஓசை - 7 | ஜனவரி - 2025 | திங்களிதழ்

படைப்பு

www.padaippu.com


# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



அரசு பதிவு எண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர்:
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு:
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு:
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி:
ஷென்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு:
ஆர்.பிரகாஷ்

இணையதள முகவரி:
padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| தங்கேஸ் | 04 |
| ஆத்மாஜீவ் | 04 |
| ஆ.சார்லஸ் | 05 |
| அ.சீனிவாசன் | 06 |
| ச.ஆனந்தகுமார் | 06 |
| செ.ரா.கிருஷ்ணகுமாரி | 07 |
| கௌ ஆனந்தபிரபு | 07 |
| மகேஷ் சிபி | 08 |
| பூங்கோதை கனகராஜன் | 08 |
| வினோத் பரமானந்தன் | 08 |
| வி வி கலைச்செல்வி | 09 |
| சாய் மீரா | 09 |
| செந்தூர் குமார் | 09 |
| உமா மஹேஸ்வரி பால்ராஜ் | 10 |
| மெஹராஜ் பேகம் | 10 |
| கி.கவியரசன் | 10 |
| இயலிசம் | 11 |
| ஸ்ரீவாரி மஞ்சு | 11 |
| மஹா பர்வீன் | 12 |
| தி.கலையரசி | 12 |
| மா. காளிதாஸ் | 13 |
| ஐ.தர்மசிங் | 14 |
| பிரபுசங்கர் க | 15 |
| எஸ்.உதயபாலா | 15 |
| சௌவி | 16 |
| கோ. சிவா தமிழ் | 16 |
| சுதா செழியன் | 17 |
| ராணி கஸ்தூரி | 17 |
| ஜெயதேவன் | 18 |
| ஷிபானா அஸீம் | 19 |
| வணவை தூரிகா | 19 |
| சங்கரி சிவகணேசன் | 20 |
| தேனி முத்து பிரசாத் | 20 |
| ஷப்ரா இல்முத்தீன் | 22 |
| வருணன் | 23 |
| சூ. சசி | 23 |
| ப.மதியழகன் | 24 |
| கவி. விஜய் | 25 |
| ஜோதி சரண் | 25 |
| செ.வீரமணி | 26 |
| க. புனிதன் | 26 |
| கோ. பாரதிமோகன் | 27 |
| கா வெங்கடேஸ்வரன் | 28 |
| நரேன் | 28 |
| சுசித்ரா மாரன் | 29 |
| மு.முபாரக் | 29 |
| ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன் | 30 |
| ம.கனகராஜன் | 31 |
| ஜே.ஜே.அனிட்டா | 32 |
| பாத்திமா மிஸ்னா | 33 |
| ஆ.விஜயலெட்சுமி | 34 |
| சசிகலா திருமால் | 35 |
| தங்கராஜ் பழநி | 36 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | 36 |
| நிஷா ராஜேஷ் | 37 |
| த.முருகன் | 37 |
| ரிஸ்கா முக்தார் | 37 |
| கீதாவனி | 39 |
| கவிஞர் முத்தையா மோகன் | 39 |



## உயிர் பெறுவது

மிகச் சாதாரண வரி ஒன்றை எழுதுகிறேன்
உயிர் பெற்று நெளிந்து கொண்டிருக்கிறது
ஒரு புதிய அரவம்

சிறு அசைவுக்கும் பொறுக்காமல்
தலை தூக்கி சீறுகின்றன
சுருண்டு கிடக்கும் நினைவுகள்

மோனத்தின் துயர வெளிதனில்
உன் வாலில் கட்டி இழுத்துப் போகிறாய்
மௌனத்தின் சோபையில் மயங்கும்
உயிர்களை

ஆளரவமற்ற வனாந்தரத்தில்
கள்ளும் முள்ளும் கீறி
குருதி சொட்ட சொட்ட
கையில் பாத்திரமேந்தி
வீதிவலம் வருகிறாய் பிச்சாடனராய்

தழும்பும் உள்ளங்களை
அதிலிட்டு நிரப்பிக் கொண்டிருக்கிறோம்
நிரம்பாத பாத்திரமது
என்று தெரிந்து பின்பும்

யாரோ
உற்று நோக்கிக் கொண்டிருப்பதாய் உறுத்தவே
சட்டென்று அண்ணாந்து பார்க்கிறேன்

அங்கே தலைக்கு மேல்
அசைந்தாடிய படியே
நீ படமெடுத்தாடிக்கொண்டிருக்கிறாய்

துயரங்களின் கரங்கள்
மாறி மாறி உருவிக் கொண்டேயிருக்கிறது
வாழ்வின் சபையில்.

இந்தக் காட்சியில் வராத கடவுள்
அடுத்தக் காட்சியில் பார்க்க வருவாரா
எனது பிணத்தின் நிர்வாணத்தை.

● தங்கேஸ்

● ஆத்மாஜீவ்



## வானதூதனின் பாடல்

கிறிஸ்துமஸ் விழாவிற்கு
முந்தைய நாள்.

குழந்தையாக யேசு பிறப்பதற்காக
மாட்டுக் கொட்டிலை
தயார்படுத்தியிருந்தனர்,
சிறு குழந்தைகள்.

பெற்றோர்களிடம் நச்சரித்து
அலங்காரப் பொருட்கள்
பலதையும் வாங்கி,
குழந்தைகள் அலங்கரித்தனர்
குடிலை.

வழிகாட்டும் விண்மீன் மட்டும்
அந்த மீனவ கிராமத்துக் கடைகளில்,
கிடைக்கவேயில்லை.

தெரிந்தவர்கள் அறிந்தவர்கள்
உறவினர்களிடமும் கேட்டு,
பலனேதுமில்லை.

சோகத்தில்
பின் மாலைப்பொழுதில்,
கடற்கரையில் விளையாடிய சிறார்களுக்கு,
அதிசயம் காத்திருந்தது.

கடற்கரை மணலில்
தங்கமென மின்னிய,
சில நட்சத்திரங்கள் கிடந்தன.

ஆவலுடன் சேகரித்த சிறார்கள்
அங்கேயே,
கிறிஸ்துமஸ் பாடலை
பாடஆரம்பித்தனர்.

நட்சத்திரங்களை சிதறவிட்டு
தூரத்திலிருந்த வானதூதரும்,
துள்ளலுடன்
கிறிஸ்துமஸ் பாடலை ஆரம்பித்தார்.

● ஆ.சார்லஸ்



மழை விழுந்ததும்
மழையாகிறேன்.

நான் எப்படி
நனைவேன்!!!

உன்னில் விழுந்ததும்
நீயாகிறேன்.

நான் எப்படி உனைப்
பிரிவேன்!!!

● அ.சீனிவாசன்

ஒவ்வொரு முறையும்
நெகிழி மூடி திறக்கப்பட்டு
உலோக கம்பி சுருங்கிய
தோல்களுக்குள் பயணிக்கிற
வலியினூடே அடுத்த முறைக்கான
பதைபதைப்பு ஆட்டிபடைக்கிறது...

கையூட்டின் இருத்தலில் வளர்த்தவயிறு
நீரிழிவின் தீவிரத்தில் ஒட்டிப்போனது...

எதிரேயிருக்கிற மரத்தின் சருகு
காற்றில் மிதந்து பயணிக்கிறது
சலனங்களற்று...

● ச.ஆனந்தகுமார்



அடுப்படியில் தினம்
வெந்துக் கொண்டிருப்பவளை
மீண்டும் எரிக்காதீர்கள்
புதைத்து விடுங்கள் அவளை

விறகுகளைச் சுமந்தவளின்
மேல் அடுக்காதீர்கள்
அவள் சுமந்து வந்த கட்டைகளை

தினமும் விறகுகளுடன் வாழ்பவளுக்கு
வாழ்க்கை புரிகிறது
ஒரு பிடி சாம்பல்

கிழிந்த ரவிக்கையில்
கண்கள் மொய்த்திருக்க
சாப்பிடும் தட்டில் இருந்தது
அவள் கண்கள்

சாமிக்கு எடுத்து வைப்பது போல
முதலில் தன் குழந்தைகளுக்கு
எடுத்து வைக்கிறாள் இட்லியை

ஒரே பாட்டில் அவள் முன்னேறுவதில்லை
அவள் பாடு பெரும்பாடு.

● செ.ரா.கிருஷ்ணகுமாரி

தீனக்குரலில்
அழைத்துக்கொண்டே இருந்தது.
வெள்ளைச்சட்டையின் பொருட்டும்
சாக்கடையின் பொருட்டும்
விலகி நின்ற என்னிடம்
சட்டென லுங்கியை மடித்துக்கட்டி
உள்ளிறங்கி குட்டியைத் தூக்கிவிட்டவன்
“பாவம் சார்... கத்திக்கிட்டே கிடக்குது”
என்று புன்னகைத்தபடி கடந்துபோனான்.
எத்தனை குளித்தும் போகவேயில்லை
என்னிடமிருந்த சாக்கடை நாற்றம்.

● கௌ ஆனந்தபிரபு



மின் கம்பத்தில்
கூடு கட்டுவதற்கு முன்
மரங்களை தேடியிருக்கும் பறவை

● மகேஷ் சிபி

அதிகாலையில் கூவும் குயில்கள்
அடையாளம் காட்டுகின்றன
தன் மரமிருந்த வீட்டை

ஓசை எதைக் கடக்க.?
நகரத்தையா...?
காடிருந்த நகரத்தையா...?

● பூங்கோதை கனகராஜன்

## இப்படித்தான் தினமும்...

எதையாவது எழுதிக்
கொண்டிருக்கிறேன்...

ஒரு அன்பை... ஒரு பிரிவை...

ஒரு நெகிழ்வை, ஒரு நிராகரிப்பை

சின்னதொரு தோல்வியை,
பெரியதொரு வெற்றியை...

கையாட்டி கடக்கும்
குழந்தையை,

வத்தல் குழம்பில்
அதிகமாகிப் போன காரத்தை,

இந்த அரசியலை...

ஆறிக் கொண்டிருக்கும்
காபியை...

என்னை நம்பி விடியும்
விடியலை...

கவிதையைத் தவிர்த்து
வேறெப்படி கொண்டாடுவது...

● வினோத் பரமானந்தன்



ஊதி ஊதி அடைத்த
பலூன்களில்
பலவற்றை நிரப்பிக் கொள்கிறாள் பாப்பூ.
கொஞ்சம் கோபம்
கொஞ்சம் சிணுங்கல்
கொஞ்சம் அழுகை
கொஞ்சம் சிரிப்பு என
நவரசம் கலந்து...

முடிச்சிட்டு விட்டு பின்
முன்னமர்ந்து
போதுமென்றுசொல்கிறேன்...

ஒன்றும் சொல்லாது
ஊதிக் களைத்துவிட்டு
கொஞ்சம்
காது கொடும்மா என்க
மிக மெதுவாய் காற்றைச்
சிறைபிடித்துவிட்டேன்
என்கிறாள்...

திசை தெரிந்த காற்று
திக்குமுக்காடுகிறது
பின் திமிரிப் பறக்கிறது...
பால்யம் பரவசம் தான்
பாப்பூவின் சாயலில்

● வி வி கலைச்செல்வி

ஆம் அதே நான் தான்
உடைத்துவிட்டீர்கள்
தான்
ஆனாலென்ன
எனக்கு பூக்களை
நீட்டுதல் தவிர
கோடரி பிடிக்கத் தெரியாது
ஒரு போதும்

● சாய் மீரா

மேய்ச்சல் நிலமென்றாலும்
சுலபத்தில் மேய்வதில்லை
நகரத்தில் வளர்ந்த மாடுகள்

பனித்துளியென்றாலும்
மேயாமல் விடுவதில்லை
வெயில்

● செந்தூர் குமார்



துலாக்கோல்
சரியாகக் கொள்கையில்
காவல் தெய்வம்
கடமையாற்றாது
போவது போல்
பிழைகிறது காதல்

சாரல் மழையில்லை
சரியானதொரு
மறுபொழுது அச்சம்

சந்தனக்காடுகளின்
பூக்கள் விசும்பும்
சன்னக்குரலில்
இன்றும் உறக்கம்
தொலைவது உறுதி

களவு போன உன்
குழலைத் தேடுகிறது
என் பைத்திய ஒலிகள்

எதிரொலிக்காத தூரம்
நீ போயிருக்க வேண்டாம்...

● உமா மஹேஸ்வரி பால்ராஜ்

வீடு மாறிய பின்பும்
பழைய முகவரியிலேயே
அலைந்து கொண்டிருக்கும்
அஞ்சலில் வந்தடைந்த
கவரை போல
அம்மா இல்லாத
வீட்டைச் சுற்றியே
பரிதவித்து கொண்டிருக்கிறது
எனது அன்பு

● மெஹராஜ் பேகம்

குளத்தின் மேலெழுந்த சலனம் போல்
ஆழ்ந்த மௌனத்தின்
கரையை முட்டித் ததும்புகிறது
எங்கிருந்தோ ஒரு பறவை எழுப்பிய ஒலி

● கி.கவியரசன்



யாரும் எழுதிடாத
விலை மாதுவின் மார்பில்
ஒரு காதல் கடிதம் எழுதுகிறேன்
வேண்டாமென்கிறாள்
மனது வலிக்கிறதென்கிறாள்
கிள்ளி நுகர்ந்து போன
மலரின் வலியை
மீண்டும் நாக்கொண்டு
தீண்டாதிருவென்கிறாள்
பச்சைப்பச்சையாய்
புணர்ந்து போவென்று திட்டுகிறாள்
ஆண்களை நம்புவதாக இல்லை என்று
குறிகளை அறுத்தெறியவும் விரும்புகிறாள்
எவ்வளவு கெஞ்சியும் கொஞ்சியும்
கவிஞர்களை மட்டும்
நம்புவதாக இல்லை என்கிறாள்
தினமும் தவறுதலாகவே எழுதியெழுதி
கசக்கி எறியப்பட்ட காகிதங்களின்
வலி அறியாத என்னிடம்
வெள்ளை மனதோடு தான் சொல்கிறாள்
எதையாவது எழுதிவிட்டுப்போ
பசியாற்றிக் கொள்கிறேன்
இந்த நேரமென்கிறாள்.

ஒரே ஒரு கவிதை
இப்படித்தான் முடிக்கிறேன்
குப்பைத்தொட்டியில் ஓராயிரம்
கருணை மனுக்கள்.

● இயலிசம்

பத்து பேரிடம்
ஆரூடம் பார்த்து...
ஓதிய வேதத்தில்
முப்பத்து முக்கோடி தேவர்களின்
ஆசிர்வாதமாகியும்
வெட்டி நிற்பதில்
கடவுள் நிற்கும்
இடமெது??
ஆறாம் அறிவில்
“நான்” எனும் கருவறை
இருட்டுக்குள்
உண்மை கடவுளை
முடக்கிவிட்டதில்
நீள் தவத்திலிருக்கிறது
அன்பே சிவம்...

● ஸ்ரீவாரி மஞ்சு



வெளிச்சம்
இருள்...
பங்கிட்டு உருளுது உலகம்...

விடியலுக்காகவே
வேர்கள் ஊன்றும் நாம்...

அதே பூமி
அதே ஆகாயம்
சிறகுகளின் நம்பிக்கையில்
வட்டமடிக்கும் பறவைகள்...

இளைப்பாற
இருந்து போக
சம்மதித்து
தலையாட்டும் மரங்கள்...

ஜனவரி பிறந்தால் என்ன
எதனோடும் உடன்படாமல்
தன் இயல்பை நிறுத்தி
இயல்பாய் இருக்கிறது
டிசம்பர் பூ...

● மஹா பர்வீன்

காதலின் துலாக்கோலில்
நீ வருவதற்கு முன்பும்
விலகிச் சென்ற பின்பும்
தள்ளாடிக் கொண்டே இருக்கிறது
என் உயிர் முள்.

இதற்கிடையே
என்னில் பூரணமாய்
நீ நிரம்ப நிரம்ப
இன்மையில் தொலைகிறேன் நான்.
அந்தக் கணத்தில் தான்
உயிர் முள்
அசைவற்று ஸ்தம்பித்து நிற்கிறது.

நீ எனக்கு
அத்தனை எளிய சமன்பாடு
இல்லை தேவதா.

● தி.கலையரசி



பாகல் நீக்கிய சொற்கள்
உண்டியலை விலக்கிய பார்வை
காற்றுப் புகாக் கைகோர்ப்பு
அட்சயப் புன்னகை
இதமான குளுமையுடன்
இன்னும் அப்படியே தானிருக்கிறது
நம் பொழுது.

எப்போதோ ஊற்றி வைத்த கோப்பையைச்
சூடும் சுவையும் மாறாமல்
ஆவி பறக்க
ஏந்திக் கொண்டிருக்கிறது காலம்.

சோம்பல் முறித்து
அதை வாங்கிக் கொண்டால் போதும்
மகரந்தங்கள் சூல் கொள்ள
இணைந்து பறிப்போம்
சில முத்தக் கனிகள்.

தன்னையறியாமல் கழுத்தைத்
திருப்பிக் கடப்பவர் சொல்வர்
நம் வெளி
ஒரு நந்தவனம் என.

அப்புறமென்ன
நம் கனவுகள்
கண்ணாமூச்சி விளையாடும்.

இன்னொரு கோப்பை வேண்டுமாவென
ஒரு பணியாளைப் போலக் கேட்கும் காலம்.

வெட்கிப் புன்னகைத்து
நீயோ நானோ சொல்வோம்
இப்'போதைக்கு' வேண்டாம்.

● மா. காளிதாஸ்



அன்பு ததும்பும்
அம்மாவின்
அதிசய தாய்மடி

அச்சம் தவிர்க்கும்
அப்பாவின்
ஆச்சரிய நிழல்

கோபம் தணிக்கும்
மனையாளின்
மந்திர வருடல்

தடுமாறினால் தாங்கும்
மகனின்
இளங்கை சூடு

வாயினுள் இறங்கும்
மகளின்
கடைசி சொட்டு நீர்

நெற்றியில் பதியும்
பேத்தியின்
ஈர முத்தம்

கண்முன்னே கசியும்
நண்பனின்
சில துளி கண்ணீர்

வரமாய் வாய்த்த
வாழ்வின் முன்
சிறியதாகி விடுகிறது
இந்த உலகம்.

● ஐ.தர்மசிங்



புஜ்ஜிக்குட்டி இதுவரை
ஐந்து பிறந்த தினங்கள்
கொண்டாடியிருக்கிறாள்
முதலிரண்டை புகைப்படங்களில்
பார்த்து தெரிந்து கொண்டவள்
அடுத்தடுத்தவற்றை
நினைவுத் திரையில்
ஞாபகம் வைத்திருக்கிறாள்
ஒவ்வொரு பிறந்தநாளையும்
ஏன் வேறு வேறு வீடுகளில்
கொண்டாடியிருக்கிறோம்??
அப்பாவியாக அவள்
கேட்கும் கேள்விக்கான
பதிலைத் தேடுவதில்
தோற்றுப்போகிறது
தேசத்தின் பொருளாதாரம்...

● பிரபுசங்கர் க

பரந்து விரிந்து கிடக்கும் இந்த நிலத்தை
நான் வெறித்துப் பார்க்கும் போதெல்லாம்
என்னை ஏன் இம்புட்டு வருத்துகிறது
எனத்தான் தெரியவில்லை.
மழை பெய்து
காடுகரை ஊற்றெடுக்கும் காலங்களில்
“என்ன மறந்துப்புட்டீங்களேடா! பாவிப் பயலுகளா!”
எனச் சொல்லி கரை புரளும்
கண்ணீருடன் மறித்துக் கிடக்கும் அதே நிலம்
வறண்டு வெறிச்சோடிய காலங்களில்
“எப்படா என்னையக் காப்பாத்தப் போறிக!”
என ஆதி கிழவியாய் ஒப்பாரி வைத்து அழுகிறது.
இனி என்னால் என்ன செய்து விட முடியும்
இந்த நிலத்தின் பரிதவிப்பை அடக்க !
எனது பெரும் தவிப்பைத் தவிர்க்க!

● எஸ்.உதயபாலா



உங்கள் காம்பவுண்ட் சுவற்றின்
கேட்டைத் திறக்கும்போதே
கட்டி வைக்கப்பட்டிருந்த
உங்கள் நாய்
ஊருக்கே கேட்கும்படி குரைத்தது

நாயின் குரைப்பொலிக்கு
உங்கள் உறக்கம் கலைந்துவிடுமென
நினைத்தேன்
உங்கள் உறக்கம் கலையவில்லை

கேட்டைத் திறந்து வீட்டுப் படியேறி
கதவைத் தட்டினேன்
கதவு திறக்கப்படவில்லை

பின்புதான் கவனித்தேன்
காலிங்பெல் இருந்ததை.
காலிங்பெல்லின்
நான்கைந்து அழைப்புக்களுக்குப்பின்
கதவு திறந்த உங்கள் மனைவி
இன்னும் நீங்கள்
உறங்கிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்

படியிறங்கி
கேட் கதவைச் சாத்துகையில்
மறுபடியும் உங்கள் நாய்
ஊருக்கே கேட்கும்படி குரைத்தது

கேட்டைச் சாத்திவிட்டு
வந்த வழியே திரும்புகிறேன்
நீங்கள் இன்னும்
உறங்கிக்கொண்டிருப்பதாக
நினைத்துக்கொண்டே

● சௌவி

வாசலோடு
பேசிக் கொண்டே
கோலம் போடுகிறாள்
அம்மா...
புள்ளிகளுக்கு புல்லரித்து போகிறது.
மார்கழி பனி அம்மாவின்
தலையில் விழுந்து
ஆசீர்வதித்து கோலத்தை
பார்த்து ரசிக்கிறது...
அம்மா புள்ளிகளை
தவற விட்ட இடத்தில்
பூவரசு இலைகள் விழுந்து நிரப்புகிறது.
கோலம் முடியும் பொழுது அம்மாவின்
விரல்களுக்கு
முத்தமிடுகிறது
மொத்த கோலமும்.

● கோ. சிவா தமிழ்



அந்த விழாவில் என்னைப் பார்த்த
குமரன் மாமா என் பெயருடன்
சத்தமாக கண்ணுவைச்சேர்த்து
அழைத்தபடி என் கரங்களைப்
பற்றிக்கொண்டார்...
சிறு வயது முதல் தோள் தாங்கி
வளர்த்த பாசம் அவருடையது...
நீண்ட நாட்களுக்குப்பின் பார்த்த
ஆனந்தம் எங்கள் இருவருக்கும்...
கோர்த்திருந்த எங்கள் கரங்களைப்
பார்த்தவர்கள் வித்தியாசமான
விழியசைவுடன் கடந்தார்கள்...
எனக்குத்தெரியும் மாமா பெண்கள்
விஷயத்தில் கொஞ்சம் வேறுமாதிரிதான்...
அந்தப் பார்வைகளைக் கவனித்த
மாமா தன் கரங்களை எடுத்தபடி
தரையைப் பார்த்தார்...
நான் மீண்டும் அந்தக் கரங்களைப்
பற்றியபடி சொன்னேன்...
அப்பா இல்லாத எனக்கு
அப்பாவா இருந்தீங்க இனி
மத்தவங்களுக்கும் அப்படியே
இருந்துடுங்க மாமா... என்றதும்
கண்ணீருடன் சிரித்தார் அந்தக்கண்ணீருடன்
எல்லாருக்கும் அப்பாவாகிவிட்ட
குமரன் மாமாவை இன்னும்
பிடித்தது எனக்கு...
மாற்றத்துக்கான கணம் தனக்கு
அவகாசம் கோருவதில்லை...

● ராணி கஸ்தூரி

கருப்பாக இருந்தாலும்
அழகாக இருக்கிறது
பறக்கும் பறவையின்
நிழல்!

● சுதா செழியன்



ஒரு கதவு மூடினால்
இன்னொரு கதவு திறக்கும்
ஒரு மொட்டு மலர்ந்து
உதிர்ந்தபின்னும்
எங்கோ ஒரு மொட்டு
மலரத்தானே செய்கிறது

யார்யாரோ மிதித்த தடங்களை
ஓர் அலைவந்து
அழித்துவிடுகிறது
ஆனாலும் மீண்டும் மீண்டும்
மனிதத் தடங்கள் அதே கடற்கரையில்

அன்றாடம் சாவுப்பறை
எங்கோ ஒலிக்கவே செய்கிறது
அதேசமயம்
எங்கோ ஒரு பிரசவம்
நிகழத்தானே செய்கிறது

ஒரு காதலி கைவிட்டாலும்
காதல் கைவிடுவதில்லை
காதலிகள் நிரந்தரமல்ல
காதல் நிரந்தரம்

முன் பழகிய பன்னூறு
நண்பர்கள் இப்போது
நட்பில் இல்லை
பழைய நட்புச்சங்கிலி அறுந்து போனாலும்
புதுநட்புச் சங்கிலியை உருவாக்குகிறது
காலம்
நட்பு பூரணம்...

ஒரே பட்டாம்பூச்சியா தினமும்
நாம் பார்ப்பது
ஒரே குருவியா நம் மரத்தில்
அமர்கிறது?
வேறுவேறுதானே
ஆனாலும் பட்டாம்பூச்சிகள்
குருவிகள் நிரந்தரம்

முதுகுப் பையுடன் பள்ளி செல்லும்
பதின்பருவப் பெண்
ஒருநாள் கர்ப்பம் சுமக்கிறாள்

ஆனாலும் பதின் பருவம்
அப்படியேதான் தொடர்கிறது.
இன்னொரு பெண்ணிடம்

ஒரு ரயில் போன தண்டவாளம்
மயான அமைதியுடன் இருக்கிறது
இன்னொரு ரயில் வரும்போது
புத்துயிர் பெறுகிறது

காலம் எதையும் பறிப்பது இல்லை
ஒவ்வொன்றையும் மடைமாற்றுகிறது
மரணத்தைக்கூட...
ஓர் உடற்கூடு போனால்
இன்னொரு உடற்கூடு முளைக்கவில்லையா?

காலம் பூரணமானது
பருப்பொருள் அநித்தியமானது

அநித்தியம் வேறொரு அநித்தியத்துடன்
உறவு கொள்வதைத்தான் நாம்
வாழ்க்கை என்கிறோம்
அநேகமாக

● **ஜெயதேவன்**



இப்போதும்
ஒரு பிரிவுக்காக
கண்கலங்குபவளில்லைதான்

உதாசீனங்களுக்காக
முன்புபோல்
மனமுடைபவளில்லைதான்

அவமானங்களுக்காக
தலைதாழ்ந்து போவளில்லைதான்

இப்போது
மறுப்பேதுமின்றி
போ என்றால் போய்விடுவேன்தான்

இருந்தும்
எவரேனும்
தொடர விரும்பும்
உரையாடல்களிலும்
நீடிக்க விரும்பும்
உறவுகளிலும்
எப் பிரயத்தனங்களுமில்லை

ஆகவேதான்
பயணத்தின் பாதைகளில்
விரும்பிக்கேட்ட பாடலாக சிலர்
ரசித்து வாசித்த
நல்ல கவிதைகளாக சிலர்
திடீர் திருப்பங்களுடன்
முற்றுப்பெற்ற நாவலாக
சிலர்
விடைபெறத்தான் செய்கிறார்கள்...

● ஷிபானா அஸீம்

ஒரே சுற்று தான்
பூமிக்கு ஒரு நாள் முடிந்தது

நமக்கு தான்
365 சுற்று தேவைப்படுகிறது...!

● வணவை தூரிகா



நான் நானெனவும்
நினைவுகளும் எனதெனவும்
நிறைக்க விரும்பிய
ஒரு பொழுதுதைச்
சொட்டு சொட்டாய்
நிரப்பிக் கொண்டிருக்கிறது வீடு...

பாடசாலை முடிந்து திரும்பும்
பிள்ளைகள்
அலுவலகத்திலிருந்து
திரும்பும் கணவன்
தயாரிக்கப்படாத அடுத்த வேளை
உணவு...

கழுவி வைத்த பாத்திரங்கள்
துடைத்து வைத்த அடுப்பங்கரை
இன்னும் உலர்த்தப்படாத
ஈர உடைகள்... என

அத்தனையும் ஒன்று சேர்ந்து
திண்மமடைந்து
கிடக்கிறது பொழுது...

எனக்கே என் மீது
அலட்சியம் தோன்றுகிறது
வாழ்க்கையின் மீது
அடர்த்தியாகாப் பூசப்பட்டிருக்கிறது
இந்த வண்ணம்...

என்னை நான் நெருங்கும்
போதெல்லாம்
என்னை விரட்டியடிக்கும்

நினைவுகள் எனதாகவில்லை
எப்பொழுதும்
வீட்டையே அசை போட்டபடி
நிசப்தித்துப் போன
நினைவுகளில் தொலைகிறது...

அந்நியமாதலின் சூல் கொண்டு
அல்லல்படுகின்ற போதும்
மனம் நட்சத்திர கிரீடமணிந்த
தேவதைகளாய் வரம் தர மறுப்பதில்லை...

● சங்கரி சிவகணேசன்



நினைவுகளை மட்டும்
தந்துவிட்டு
சென்ற உனக்கு
முற்றுப்பெறாத
கவிதை அன்றி
வேறென்ன எழுத முடியும்

காணல் நீர்
தெரியும்போதெல்லாம்
அருவியை
எழுதிக் கொண்டிருந்த
எனக்கு
மழை இல்லா
உன் பாலைவன
காதலைப் பற்றி
எனக்கு என்ன தெரியும்

உன் இதழ்
வார்த்தைகளை
கூர்ந்து கவனித்துக்
கொண்டிருந்த
என் மனம்
உன் விழி பார்வையை
தவறாய்
மொழிபெயர்ப்பு
செய்து விட்டதே

காலம் தவறாமல்
நமக்காக
காத்திருந்த
அந்த மரத்தடி
பூங்காவிற்கு கூட
நான் தனியாய்
வந்து
அமர்ந்த போது தான்
புரிகிறது

இயற்கையின்
இந்த எல்லா
உயிர்களுக்கும்
நான் எப்படி
சொல்லி புரிய வைப்பேன்
கண்ணாடி காட்சிகள் எல்லாவற்றையும்
கவிதைகள் எழுதி
கரைத்துக் கொண்டிருக்கிறேன்
என்று

எழுதி
தீர்த்துவிடத்தான்
எனக்கும் ஆசை
இன்னும்
முற்றுப்பெறாத
உன் நினைவுகளை
சுமந்துக் கொண்டிருக்கிறதே
இந்த சிலுவை மனம்...

● தேனி முத்து பிரசாத்



யாரும்
அருகில் இல்லாப் பொழுதொன்று
எப்போதும் அவஸ்தை
நிறைந்ததாகத் தான் இருக்குமென
நீ நினைக்கிறாயா

யாருமில்லாப் பொழுதொன்றில் தான்
உன்னைப் பற்றி நினைப்பதெற்கொரு
தனிமை கிடைக்கிறது

இவ்வாழ்வில் நீ
கடந்து வந்த பாதையை
பெருமூச்சோடு திரும்பிப் பார்க்க
நேரிடுகின்றது

மனதோடு ஒன்றித்துப் போன
நினைவொன்றுக்குள் மூழ்கி
நினைத்தபடி உன்னால்
கண்ணீர் சிந்த முடிகிறது

நினைத்ததை நினைத்த போது
தராத இவ்வாழ்க்கை மீது
உரிமையோடு
கோபம் கொள்ள முடிகிறது

என்றோ புரியாது
பிரிந்து சென்றோரை நினைத்து
தனியே கொஞ்சம் சிரிக்க முடிகிறது

இழந்தவையும் நலவுக்கென
இடிந்து போன மனதை
இதமாய் தேற்றிக் கொள்ள முடிகிறது

ஆக
நிஜமாகவே யாரும்
அருகில் இல்லாப் பொழுதும்
ஆறுதலாய் தான் இருக்கிறது
குளிர் காலத்தில்
பிடித்தமானவருடன் அருந்தும்
ஒரு தேநீர் இடைவேளை போல்!

● ஷப்ரா இல்முத்தீன்



**ச**துரங்கக் காய்களுக்கு
நடுவில் நொண்டும்
காலொடிந்த குதிரை நான்
நகரவும் ஏலாத தாவவும் ஏலாத
வாதை
அப்பக்கம் வந்த
யானையொன்று அரண்
கட்டிய மாத்திரத்தில்
இப்போது நான்
கண நேர ராஜா.

● வருணன்

## வாழ்வாதாரம்

கரைகடலில்
கனிம வெப்பம் தாங்காமல்
ஆழத்தில் சென்ற மீன்களை
சுட்டுப்பிடிக்க முயன்றவர்கள்
இது எங்கள் இடமென்றதும்
பிழைப்பதற்கு ஓடிய மீன்களுக்கு
கடல்விட்டு வெளியேர வந்த அறிவிப்பில்
ஆற்றுவழி பாதையைத்தான்
பயன்படுத்த வேண்டுமென்பதும்
குளங்களே இனி உங்கள்
குடியிருப்பு என்பதும்
மாற்றுவாரிய குரலாகவே இருந்தது
காடுவிட்டு உருண்டுவந்த
ஒருதுளி நன்னீரில்
கடல்சேர்ந்த ஆற்றுமீனின்
குடல் வற்றிய மரண வாக்குமூலத்தை கேட்ட
கடல்மீன்களும் கண்கலங்கின
இனிநம் வாழ்வாதாரம்
காலன்களின் கையில்
சிக்கிக்கொண்டதே... என்று.

● சூ. சசி



## மேடை

ஆகாசம் சப்தங்களை
பிரசவிக்கிறது
பிரபஞ்சத்தின் அதிர்வலைகள்
என் குரல்களைச் சுமந்து
செல்கின்றன
எதிரொலிப்பது என்குரல்தானா என்று
யாரிடம் கேட்டு நான்
உறுதிபடுத்திக் கொள்வது
அலட்சியப்படுத்திவிடாதீர்கள்
நீங்கள் செவிமடுப்பது
கடவுளின் குரலாகக் கூட
இருக்கலாம்
இடைவெளிவிட்டு அமருங்கள்
பக்கத்து இருக்கை கடவுளுடையது
சத்தம் எழுப்பாதீர்கள்
கடவுள் உள்ளே
பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்
உங்கள் கதாபாத்திரத்தை
ஏற்று நடித்ததற்காக கடவுளிடமிருந்து
வெகுமதியை எதிர்பார்க்காதீர்கள்
நீங்கள் கோரிக்கையை
முன்வைக்கும்போது அதை
பரிசீலிப்பவர் கடவுள் என்பதை
நினைவில் கொள்ளுங்கள்
கடவுளிடம் பாவமன்னிப்பு
கேட்டும்போது உங்கள் முகமூடியை
கழட்டி வைத்துவிடுங்கள்
கடவுளிடம் வேண்டுகோளை
முன்வைக்கும்போது அதில்
கொஞ்சம் கண்ணீரும் கலந்திருக்கட்டும்
கடவுள் சாத்தியமற்றதை
செய்து கொண்டிருப்பதாக
சொல்லப்பட்டாலும்
மறுதலித்துவிடாதீர்கள்
நம்புங்கள் அப்போது தான்
மறுமை நாளில் நம்மையும்
உயிர்த்தெழவைப்பார்
உங்கள் முதல் ஏமாற்றத்தை
எடுத்துச் சொல்லுங்கள்
நீங்கள் பகிர்ந்துகொள்வதால்
கடவுள் உலக நாடகத்தில்
முக்கிய கதாபாத்திரத்தை
உங்களுக்கு அளிக்கலாம்!

● ப.மதியழகன்



உருண்டோடும் லப்பர் பந்து
சிறுவனின் காலடியோசை
பின்தொடர்கிறது.

வசந்தகாலம்
மரத்தோடு துளிர்விடுகின்றன
அதன் விதைகளும்.

அச்சாணி முறிந்த தேர்
பகுதியை மறைத்து
முல்லைக்கொடி பூத்திருக்கிறது.

தூரத்து துப்பாக்கிச் சத்தம்
வீட்டுமரத்தில் சிலநிமிடம்
அமரும் பறவைகள்.

குட்டிகளோடு
நொண்டி விளையாடுகிறது
காலடிபட்ட நாய்.

மாடு மேய்கிறது
மீண்டும் மீண்டும் புல்
துளிர்விடுகிறது.

சுவற்றின் குறுக்கே
வளரும் செடி
வானம் நோக்கியே பூக்கிறது.

சிறு பூவுடன் கூடிய செடியே
இந்த மலையைப்போலத்தான்
உன்னையும் பார்க்கிறேன்.

● கவி. விஜய்

வார்த்தை தானியங்களின்
பின்பு பெரும் வலை பின்னப்பட்டிருக்கலாம்

சொல் முலாம் பூசப்பட்ட
கத்திகள் சிறகுகளை
ஒட்ட வெட்டி விடவும் கூடும்

சில நேரம் பிணைக்கைதிகளாக்கி
விடுகின்றது பிரியக் கயிறுகள்

சுற்றி சுற்றி வந்து
வட்டத்துக்குள் சிக்க வைத்து விடுகின்றன
சுயநலங்கள்

சுயவெளி பரஸ்பரம்
மதித்தல் அன்றில் போல்
ஒன்றி வாழச்செய்யும் மூல மந்திரம்

அன்பு என்பது
சக இதயங்களை
தாங்கும் கூடு தானே

● ஜோதி சரண்



தலைவர்களை கேட்டோம்
நடிகர்களை
கொடுத்தார்கள்

கல்வியை கேட்டோம்
மொழிகளை
திணித்தார்கள்

வரங்களை கேட்டோம்
கடவுள்களை
வாங்கிக்கொள்ள
சொன்னார்கள்

உரிமைகளை கேட்டோம்
வரிகளை கொடுத்தார்கள்

கேட்பது ஏதும்
கிடைக்காத தேசத்தில்
கேட்காமலே
கிடைத்திருக்கின்றன

ஒரு தேசிய கீதமும்
ஒரு தமிழ்த்தாய் வாழ்த்தும்

● செ.வீரமணி

## குரல்

மழைக் காலத்தில்
கேட்கும் தவளை சப்தம் போல

தயிர் சிலுப்புகையில்
தனியாய் கேக்கும்
மத்து சப்தம் போல

நல்ல மண்ணில்
அடர்த்தியாய்
மாறும் கனகாம்பரம்
பூவின் நிறம் போல

பணம் உள்ள
வாடிக்கையாளரின் குரலை
எப்படியோ அடையாளம்
கண்டு கொள்கிறார்
கடைக்காரர்

● க. புனிதன்



மீன் பிடித்துக்கொண்டிருந்தாள்
கமநிதா

அவள் அன்பில் அகப்படுதலின் பொருட்டு
பேராவல் கொண்ட விண்மீன்கள்
வானத்தை கடலாக்கி நீந்தத்தொடங்கின

தன் விரிகூந்தல் இழைகளை
அலைகளாக இடம்மாற்றியிருந்த
தாடாகத்திற்கு பாதங்களை பரிசளித்தபடி
அவள் வீசிய தூண்டிலின் தக்கை இழுபடும்
குறிப்பறிந்த கமநிதா
தூண்டிலை இழுத்ததில் சிக்கியிருந்தது நிலவு

துள்ளத் துடிக்க பொற்கரத்தில் மோட்சமுறும்
கதியற்று கலங்கிய நட்சத்திரங்கள்
காலைப் புல்வெளியில்
கமநிதப் பாதங்களை முத்தமிட்டு அடங்கின

பொறாமையில் தகித்த கண்ணுற்ற சூரியன்
வெயிலை வாறி இறைத்தபடி
நாளையேனும் மீனாகும் பிரார்த்தனையில்
கண்கள் சிவக்க மேற்கில் சரிந்தது

தாய்மையின் கருணை பொங்க
தன் தூண்டிலை
கிழக்கிற்கு அருளினாள் கமநிதா

● கோ. பாரதிமோகன்



ஒன்றுக்குள் ஒன்றை அடக்க
அளவில் சிறியதாயிருத்தல் வேண்டும்
அல்லது...
அடர்த்தி குறைவாயிருத்தல் வேண்டும்
அந்த பத்துக்கு பத்து அறையில்
பார்த்து சிரிக்கும் பாவனையில்
கடவுளின் படம்.
அடக்கியது...
அடங்கியது...
அடர்த்தி குறுகியது.

பக்கத்து அறையில்
அப்பாவின் இருமல் சத்தம்
ஓடிப்போய் சன்னலை திறந்தேன்
நுழைந்த காற்றை ஆழ்ந்து சுவாசித்தபடி
ஒரு பெருமூச்சு.
சன்னல் வழியாக பார்வையை ஓடவிட்டு
சன்னமாய் புன்னகைத்துவிட்டு
மீண்டும் படுக்கையில் சாய்ந்தார்
அடக்கியது...
அடங்கியது...
அடர்த்தி குறுகியது...

பால்வெளி அண்டம் பிரபஞ்சம்
எல்லாம் உள்ளடக்கியதே கடவுளென
படித்து அறியப்பட்டது நினைவில் வந்துபோகிறது

● கா வெங்கடேஸ்வரன்

ஒரு முறைதான்
கற்பழிக்கப்பட்டாள்
ஊடகங்கள்
மீண்டும்!
மீண்டும்!!

● நரேன்



யாருமற்றவளின்
ஆறுதலுக்கென
கழிவிரக்கச் சொற்கள்
இருக்கின்றன

திடுமென விழிக்கிற இரவில்
எங்கோ ஒளிந்து கொள்கின்றன
சீவி சிங்காரித்து அவை வருவதற்குள்
படம் விரிக்கிற ஆழ்மன அச்சம் புரிவதில்லை

அவ்வகையில் கண்ணீருக்கு
மைலேஜ் அதிகம்
கட்டற்று பெருகுகிற
கண்ணீரை யாரும்
பார்க்க வாய்ப்பில்லை
அவசரமாய்த் துடைத்துக்
கொள்ளத் தேவையில்லை
அழுவதின் சுதந்திரம்
துன்பமான ஆறுதல்

● சுசித்ரா மாரன்

மின்விசிறியை
அணைத்தே
வைத்திருக்கிறேன்...
வீட்டுக்குள் வந்து போகட்டும்
வண்ணத்துப்பூச்சி!

● மு.முபாரக்



## வாசம்

அப்பாவின் சட்டைக்கென்று
 பிரத்யேக வாசம் உண்டு !

தவழும் எனை அள்ளி தூக்கியபடி
உச்சிமுகரும் அப்பாவின் சட்டையில்
எனக்காக பூசிக்கொண்ட
பான்ஸ் பவுடருடன் கலந்துவரும்
வியர்வையின் வாசம் !

எனை தோளில் தூக்கி வலம் வந்த
பொழுதுகளில் எல்லாம்
அப்பாவின் சட்டைக்கு
சிகரெட் புகையில் தோய்ந்த
 வியர்வையின் வாசம் !

என் பதின்ம வயதில்
அப்பாவின் சட்டைக்கு
பிராந்தி புட்டிகளில் ஊறிய
வியர்வையின் வாசம் !

நான் மணக்கோலம் கண்டதுமுதல்
அப்பாவின் சட்டைக்கு
மூட்டுவலி தைலத்துடன் கலந்ததொரு
வியர்வை வாசம் !

இறுதியாக நான் அப்பாவை கண்டபோது
பாராசெட்டாமல் மாத்திரையை விழுங்கிவந்தது
வியர்வையின் வாசம்!

இறுதிவரை கூடவே பயணித்த
அப்பாவின் வியர்வை வாசனையில்
என்றும் நிறைந்திருந்து
பணிமனையின் வாசனைகள்

நைந்து போன காலருடன் அலமாரியில்
உறங்கிடும் அப்பாவின் சட்டையில்
அப்பாவின் வாசனைகள் மட்டுமே உள்ளது
அப்பாவின் இழப்புக்கு பின்

● ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்





**1.**

ஒளிப்புனலுக்குள்
நீந்திப்புகுந்தேன்,
மூழ்கி எழுந்தேன்;
உடலெங்கும் வைரம்

**2.**

துளித்துளியாய்
புன்னகை
நீந்தும் மனத்துள்
கடலளவு தேன்

**3.**

வானவில்
வரைந்த கடல்
நீந்தும் திசைகளில்
தங்க நிறத்து மீன்கள்

**4.**

முடிவற்ற இயற்கையின்
இரண்டாம் பாகம்
சற்று ஆழமாகத்தான்
இருக்கின்றன
அதன் வேர்கள்

**5.**

ஒளிகளைச் செதுக்கி
சின்னஞ்சிறு சாவி செய்தேன்
அதில் என் கைரேகை பதிய
இதயத்தை மெல்ல திறந்தேன்
திடுக்கிட்ட இருளெல்லாம்
படபடத்துப் பறந்தன
வெண்புறாக்களாய்

● ம.கனகராஜன்



## குரலைப் புணர்தல்

கண்களால் மட்டுமே உணரப்பட்டவரை
புணர்தலென்பது அவன் புரிதலுக்கு
உடலைப் பிரிதல்.

வேட்டையாடுபவனின் இச்சைப்பசி
இரையை அறியும் போதே
கண்கள் அடையும் போதை.
அதற்கு இலக்கு இலட்சியமல்ல.

ஸ்கலிதம் நிகழ்கிற நேரங்களே
அவன் மனம் தெளிவைப் பேசும்.

போகத்தின் இயலாமை
அது வயிற்று பசிக்கு முன்
மேலோங்க இயலாமல் போவது.
நிர்வாணம் சுயஆறுதல் அல்லது
அவன் திரேகத்தின் மீது
போர்த்தப்பட்ட சிலுவைக் குறி.
ரசிப்பவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்.

தன்னுடலுக்கு உண்மையாய்
இருப்பவர்கள்
இன்னோர் உடலை திறப்பதேயில்லை.

அன்றாடம் அவனைக் கடக்கும்
அத்தனைக் குரலையும் புணர்கிறான்.
தட்டு முழுக்க சில்லறை நன்றிகள்.

மனம் பிறழ்ந்திருப்பதன் வசதி
கற்பு கன்றாவிக்கெல்லாம்
வேலையேயில்லை.

● ஜே.ஜே.அனிட்டா

ஒளியிழந்த என்
தெருக்களில்
விழி மூடி நடந்தே
பழகி விட்டது

அதில் கரும்பேய்
வந்தாலும் நிலவொளி
பரந்தாலும் என் முகபாவனைகளில்
மாற்றம் மூழ்வதில்லை

எப்பெரும் இருளிலும்
கைத்தடிகளின் துணையின்றிக்
காலம் ஓட்டும் சட்டங்கள்
எனக்கு நானே
போட்டுக் கொண்டது

உடன்கட்டையாகும்
தனிமையும் இஷ்டப்படி
களத்திலாட விடப்பட்டிருக்கிறது
அது அதன் செய்கைகளில்
ஏமாற்றி விட்(ட்)டுவதில்லை

பின்னந்தப் பயணத்தின்
கரடுமுரடுகள் கால் கிழித்து
காயம் செய்வ(து)து
யாரும் அறியப் போவதுமில்லை

ஆக, இந்த இருளென்பது
பல பொய்யான
ஒளிகளைக் காட்டிலும்
கருணை மிகுந்தது

இப்போது இருளின்
நிமித்தப் பேரமைதி
எனை மெதுமையாய்
ஆர்ப்பரிக்கிறது

இதோ, இன்னும்
கொஞ்சம் தூ(நே)ரம் தான்
இனி இருளுக்குள்
இவள் சரணாகதி



● பாத்திமா மிஸ்னா



ஈர விறகு புகைவது போலவே
புகைந்து போனது அம்மாவின்
வார்த்தைகளும்
வெளிவரும் முன்...

எண்ணெயில் போட்ட கடுகும்
மிளகும் கூட வெடித்தது...
ஆனால் கடைசி வரை வெடிக்கவே இல்லை
அவளின் எண்ணங்கள்!

சூடு பட்ட இடங்களுக்கு எல்லாம்
அடுத்த சூடு ஒன்றே
மருந்தாய்ப் பழகி விட்டது அவளுக்கு!

சுடச்சுட சோறாக்கிய அவளுக்கு
சூடு சுரணை இல்லாமலே போய் விட்டது
போக்கிடம் இல்லாமல் இல்லை...
போக மனம் இல்லை
என்பதால்!

ஆவி பறக்கும் காஃபி கூட
அவளை ஆற அமரப் பார்த்ததில்லை!

தலையாட்டி ஆட்டிப்
பழகியதால்
தனக்கென தனி மனமும் இல்லை!

வீட்டிற்குள் அவள் இருந்ததில்லை...
அவளுக்குள் தான்
அந்த வீடே இருந்தது!

அவள் இறக்கும் போதே
இறந்து போனது
பந்தம் பாசம் சொந்தம்
எல்லாம்...

வீடு வாசல் தோட்டம் துரவு
மௌனம் பூசி
இருட்டைப் பேசின
இழப்பின் வலியைத்
தாங்க முடியாமல்!

அவளில்லாத ஊருக்கு
எனக்கான பாதைகளும்
மறக்கப்பட்டன!

● ஆ.விஜயலெட்சுமி



## காத்திருத்தலின் வலி..

கண்டும் காணாமல் சென்றாலும்
களவாடித்தான் செல்கிறாய்
எந்தன் நெஞ்சமதை..

அது ஏனோ தெரியவில்லை
ஓரிரு நொடிகள்
உனை காண தவறினாலும் கூட
யுகாந்திரங்களை
கடந்ததொரு வலி பரவுகிறது
என்னில்....

நீயில்லா வெறுமை
எனை ஏதோ
செய்துக் கொண்டிருக்கிறது...
ஆம்...
விளைநிலமதில் மலட்டு விதையென
வீழ்ந்தே கிடக்க சொல்கிறது

நிலவற்ற வானின் இருளை
கச்சிதமாய் கவ்விக்கொள்ள சொல்கிறது...

அதென்னவோ
நான் தேட தேட
என் தேடலிலிருந்து
நீ மீண்டும் மீண்டும்
தொலைந்துக் கொண்டேயிருக்கிறாய்...

உனக்கு எப்படி தான்
எடுத்துரைப்பது...
என்னால் மட்டுமே
உன்னை இவ்வளவு ஆழமாக
நேசிக்க முடியும் என்பதை...
அட போடா...
காத்திருத்தலின் வலி
என்னவென்று ஏனோ
உனக்கு புரிவதேயில்லை...

● சசிகலா திருமால்



என்னைச் சந்திக்க வருபவர்கள்
என் அப்பாவித் தனங்களைப் பார்க்கிறார்கள்...
என் மௌனங்களை
ஏளனம் செய்கிறார்கள்...
என்னிடமிருந்து உபயோகமில்லா
கருத்துகளை
எதிர்பார்க்கிறார்கள்...
என் விசாரிப்புகளின் மீது
விமர்சனங்களைப் பரப்புகிறார்கள்...
என்னைச் சந்திக்க வருபவர்கள்
என் கண்களைப் பார்ப்பதில்லை
கடைசி வரை அவர்கள்
என்னைச் சந்திப்பதேயில்லை...!

● தங்கராஜ் பழநி

என்னிடம்
சிறிய நூல் தான்
பெரிய பெட்டிக்குள் வைத்தாவது
வண்ணத்தாள் சுற்றியிருக்கலாம்
பெரிய பெரிய
பரிசுப்பொருட்களுடன்
நீள்வரிசையில்
உடன் நிற்கிறார்கள்
வரிசை நகர்ந்தாலும்
நகரத் தயங்கும் கால்கள்...

● வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



காலப்பெருவெளியில்
உதிர்ந்த விட்ட
ஒற்றைச் சருகென
காட்டாற்றின்
பேரிரைச்சலின்
பெருமலாய்
அங்கலாய்த்திடும்
ஆற்றாமையின்
பெருங்கனத்தில்
சில்லிட்டதொரு
நீள் இரவில்
இடிந்ததொரு
இயலாமையாய்
வறண்டுவிட்ட
நதிப்படுகையின்
மௌன விசும்பலாய்
மௌனித்தே கிடக்கிறது
இந்த விரும்பியலா
தனிமை...

● நிஷா ராஜேஷ்

முள்ளோடு முள்வேலி
பாதுகாப்பாய் இருக்கிறது
ரோசாப்பூ...!

● த.முருகன்



எனதிந்தப் பிடிவாதத்தால்
எதையுமே அடைந்ததில்லை
நான்

மாறாக
சில தருணங்களை வாழாமல் வீணடித்திருக்கிறேன்
சில வாய்ப்புக்களைக் கை நழுவ விட்டிருக்கிறேன்
சில உறவுகளை விலகி நகர்ந்து வந்திருக்கிறேன்
சில இனிமைகளைக் காணாமல்
கண்மூடி இருந்திருக்கிறேன்
சில பிரியங்களை என் வாசல்
வராதுத் தடுத்திருக்கிறேன்

எனதிந்தப் பிடிவாதத்தால்
நிறையவே இழந்திருக்கிறேன்
நான்

இருந்தும்
எனதிந்தப் பிடிவாத குணம் மட்டும்
இல்லையென்றால்
இப்போது நான் ஒன்றுமே
இல்லாமலாகிப் போயிருப்பேனோ
என்னமோ

உண்மையில்
எனதிந்தப் பிடிவாதம் மட்டும்
இல்லையென்றால்
சில துரோகங்களுக்குப் பின்
என்னால் மீண்டெழுந்து
வந்திருக்க முடியாது

சில மறுதலிப்புகளுக்கு முன்
என்னால் தலை நிமிர்ந்து
நின்றிருக்க முடியாது

பின்னும்
அத்தனைக்குப்பின்பும்
வைராக்கியமாய்
என்னை வாழ்ந்துக்காட்டச்
செய்வதும்
எதிர்த்து வரும்
அலைகளோடுத்
துணிந்துப் போரிடத்
தூண்டுவதும்
எனதிந்தப் பிடிவாதமே தவிர
வேறில்லை

ஆக
சமரசங்கள்
எப்போதும் அழகுதான்
ஆயினும் சமயங்களில்
அதீதப் பிடிவாதமும்
பேரழகுதான்
இல்லையா

● ரிஸ்கா முக்தார்



மௌனம் தின்னும்
காரிய இருட்கூண்டுனுள்
என்னை நானே எப்போதெல்லாம்
சிறையிட்டுக்கொள்கின்றேனோ
அப்போதெல்லாம் உயிர் நிறைத்து
பருகி கிடப்பேன் உன் நினைப்புகளை தான்.

தொலைவாகவே இருக்கின்றாய்.
நீ என்னை தேடிவரும் பொழுதுகளில்
உன்னை காக்க வைத்த நொடிகளை
மீண்டும் மீண்டும் நெருங்கி போய்
மன்னிப்பு கோருகின்றேன்
உன் காதில் தான் விழவேயில்லை.

ஓய்ந்து கிடக்கின்றாயோ என்
அடைமழையே...ஓயாது
நினைவில் ஆடுகின்றாய் இன்று.
நாட்பட்டு நாட்பட்டு சுவையேறும்
திராட்சை நீ.  ...ச்சீ ..ச்சீ
இந்த பழம் புளிக்குமென
சிலபொழுதுகள் ஆற்றிக் கொள்ளலாம்
உன்னை இழந்துவிட்ட மனத்துயரை.

● கீதாவனி

## எதுக்கு...

சாணி அள்ளித்தான்
வயிறு கழுவனும்
ஊர் கோடியில் தான்
குடியிருந்து சாகணும்...

துண்டு என்பது
இடுப்புக்கு கீழாக தான்
முதுகு ஓடியத்தான்
கும்பிடு போடணும்...

உன் வீட்டு முத்தத்தில்
என் கால் பட கூடாது
பின் வாசல் வழியாகத்தான்
பிச்சையானாலும் கேட்டாகணும்...

எழவு செய்தி ஆனாலும்
எட்டி நின்னுதான் கூறணும்
அப்புறம் என்ன மசுத்துக்கு
உன்னை நான் புதைக்கணும்...?

● கவிஞர் முத்தையா மோகன்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

## சிறை வாசிகளுக்கு
# புத்தக தானம் செய்வீர்!

“ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும்” என்ற உயரிய எண்ணத்தோடு புத்தகங்களைத் திரட்டிக்கொண்டிருக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு இலக்கியப் படைப்புக் குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறது.



**புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**


**இலக்கிய படைப்பு குழுமம்**
#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம், சென்னை – 600 024
Ph: +91 7338847788

padaippu    admin@padaippu.com    www.padaippu.com